# News Release

# வாகன் நகரம் தனது பெருமையைப் பெருமிதத்துடன் கொண்டாடுகிறது!

வாகன், ஒன்டாறியோ (**ஜூன் 25, 2025**) – வாகன் நகரம் பெருமைமிகு மாதத்தைக் (Pride Month) சிறப்பித்து, ஜூன் 24-ஆம் தேதி வாகன் நகர மண்டபத்தில் ஒரு சிறப்புவிழாவை நடத்தியது.

இந்த நிகழ்வில் வாகன் நகர மேயர் ஸ்டீவன் டெல் டுகாவின் அதிகாரப்பூர்வ உரை, பேச்சு கவிதை கலைஞர் மேட்லின் ரோஸ் ஃபியோரேயின் நிகழ்ச்சி, கொடியேற்றும் விழா, Pflag யார்க் பிராந்தியம் மற்றும் யார்க் பிரைட் வழங்கிய கல்வி அமர்வுகள் மற்றும் தோர்ன்ஹில் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் மெலிசா லான்ட்ஸ்மன் ஆகியோரின் உரைகள் இடம்பெற்றன.

“பெருமைமிகு மாதம் என்பது காதல், அனைவரும் காணப்பட வேண்டும் என்ற உரிமை, மற்றும் சமூகத்தில் இடம் பெறும் உரிமையைக் கொண்டாடும் ஒரு அழகான விழா. வாகன் நகரம் அனைவரையும் ஏற்கும், வரவேற்கும் ஒரு நகரமாகும். இது எப்போதும் இப்படியே இருக்க நாமெல்லாம் தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டும். அனைவரும் தங்கள் உண்மையான, இயல்பான தன்மையுடன் வாழக்கூடிய நகரத்தை கட்டி எழுப்ப நாங்கள் உறுதியாகச் செயல்படுகிறோம். இந்தச் சிறந்த நகரத்தின் மேயராக, வாகனிலும் அதன் எல்லைகளுக்கும் அப்பாலும் உள்ள 2SLGBTQ+ சமூகத்துடன் ஒன்றிணைந்து நிற்பதில் நான் பெருமிதம் கொள்கிறேன்,” என்று மேயர் ஸ்டீவன் டெல் டுகா தெரிவித்தார்.

இந்த நிகழ்வு 2SLGBTQ+ சமூகத்தின் சமூக மற்றும் தனிப்பட்ட ஏற்றுக்கொள்கை, சட்ட உரிமைகள் மற்றும் பெருமையைக் கொண்டாடும் ஒரு விழாவாகும். இது 2SLGBTQ+ சமூகத்திற்கான பன்முகத்தன்மை, சமத்துவம், உள்ளடக்கம் மற்றும் சேர்ப்புணர்வை ஊக்குவிக்கும் ஒரு தளமாகச் செயல்படுகிறது. வாகன் நகரம் 2003 முதல் ஆண்டுதோறும் பெருமைமிகு வாரத்தையும், 2020 முதல் பெருமைமிகு மாதத்தையும் அதிகாரப்பூர்வமாக அறிவித்துக் கொண்டாடி வருகிறது.

மேலும் அறிய, [vaughan.ca/**culture**](vaughan.ca/culture) என்ற இணையதளத்தைப் பார்வையிடுங்கள்.

-30-

**வாகனைப் பற்றி:** வாகன் நகரம் கனடாவின் மிகவும் வேகமாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றாகும், இதன் மக்கள் தொகை 344,412 ஆக உள்ளது. 1991-இல்

# News Release

இணைக்கப்பட்ட வாகன், கான்கார்ட், க்ளீன்பர்க், மேப்பிள், தோர்ன்ஹில் மற்றும் வுட்பிரிட்ஜ் சமூகங்களை உள்ளடக்கியது. இந்தக் கலாச்சார ரீதியாகப் பன்முகத்தன்மை கொண்ட நகராட்சி, யார்க் பிராந்தியம் மற்றும் கிரேட்டர் டொராண்டோ பகுதியின் மையத்தில் அமைந்துள்ளது.

**ஊடக தொடர்புக்கு:** வாகன் நகரம்
தொடர்புகள், சந்தைப்படுத்தல் மற்றும் ஈடுபாட்டுத் துறை
905-832-2281 | corpcomm@vaughan.ca